09.08.2017

தினமலர்

**பெரியாறு அணையில் நீர்வரத்து அதிகரிப்பு**

நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையால் முல்லைப்பெரியாறு அணைக்கு மீண்டும் நீர்வரத்து மெல்ல அதிகரித்துள்ளது. தமிழக எல்லையை ஒட்டி கேரள மாநிலத்தில் உள்ள முல்லைப்பெரியாறு அணை மூலம் , தேனி, மதுரை உள்ளிட்ட , ஐந்து மாவட்டங்களின் பாசனம் , குடிநீர் உள்ளிட்ட தேவைகள் பூர்த்தியாகின்றன. இந்த அணையின் மொத்த கொள்ளளவு , 10.5 டி.எம்.சி., ஆகும். உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுப்படி, அணையில், 7.66 டி.எம்.சி., நீரை மட்டுமே தேக்கி வைக்க முடியும். தற்போது அணையில் , 1.21 டி.எம்.சி., மட்டுமே இருப்பு உள்ளது. கேரளாவில் , தென்மேற்கு பருவமழை தீவிரம் அடையாததால் , அணைக்கு போதிய நீர்வரத்து கிடைக்கவில்லை. அணை நீர்பிடிப்பு பகுதிகளில் , விட்டுவிட்டு மழை பெய்யத் துவங்கியுள்ளது. நேற்று முன்தினம் , 1.2 செ.மீ., மழை பெய்தது. இதனால் , அணைக்கு வினாடிக்கு, 634 கன அடி நீர்வரத்து கிடைத்தது. அணையில் இருந்து வினாடிக்கு , 75 கன அடி நீர் திறக்கப்பட்டது.

-நமது நிருபர்-

**ஆக.12ல் சூறாவளியுடன் மழை**




'தமிழகம் மற்றும் புதுச்சேரியில் , மழை தொடரும் ; ஆக.12ல் சூறாவளி காற்றுடன் மழை பெய்யும் ' என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நாடு முழுவதும் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. வங்க கடலின் வடகிழக்கு மற்றும்

மத்திய பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளது. அதேபோல அரபிக்கடலின் தென் கிழக்கு பகுதியில் தெற்கு கர்நாடகா முதல் , வட கேரளம் பகுதி வரை மேல் அடுக்கு சுழற்சி உள்ளது. அதனால் , 'நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பரவலாக மழை பெய்யும். வடக்கு மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் , சூறாவளி காற்றுடன் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது ' என இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. அதேநேரத்தில் 'தமிழக நிலப்பகுதிகளிலும் வட மாவட்டங்களின் கடலோர பகுதிகளிலும் மேல் அடுக்கு சுழற்சி நிலவுவதால் வரும் 12ம் தேதி வரை , தமிழகம், புதுச்சேரியில், பல இடங்களில் மழை பெய்யும். 12ம் தேதி சில இடங்களில் சூறாவளி காற்றுடன் மழை பெய்யவும் வாய்ப்புள்ளது ' என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் ஆகஸ்ட் முதல் செப். , வரையிலான, தென்மேற்கு பருவமழையின் இரண்டாம் கட்ட மழை கணிப்பை இந்திய வானிலை மையம் அறிவித்துள்ளது. அதில் 'நாடு முழுவதும் , இரு மாதங்களிலும் சராசரியாக , 43.5 செ.மீ., மழை பெய்யும் ' என கூறப்பட்டுள்ளது.

- நமது நிருபர் –

**குறைந்தது கரும்பு சாகுபடி: மேம்படுத்த அரசு முயற்சி**

சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வரத்து குறைந்ததால் , கரும்பு சாகுபடி பரப்பை , இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான பணிகளில், வேளாண் துறை தீவிரம் காட்டி வருகிறது.

தமிழகத்தில், ஆண்டு தோறும் , 7.60 லட்சம் ஏக்கரில் , கரும்பு சாகுபடி செய்யப்பட்டு வந்தது. மத்திய , மாநில அரசுகள் இணைந்து நிர்ணயிக்கும்கரும்புக்கான கொள்முதல் விலையை, சர்க்கரை ஆலைகள் , 2013 முதல், முறையாக வழங்கவில்லை. அதனால் , தமிழகத்தில், கரும்பு சாகுபடி பரப்புகணிசமாக குறைந்துள்ளது. இதனால் , சர்க்கரைஆலைகளுக்கு தேவையான கரும்புகள் கிடைக்கவில்லை. சர்வதேச சந்தையில் சர்க்கரை விலை அதிகரித்து வருவதால் , ஆலைகளுக்கு நல்ல லாபம் கிடைத்து வருகிறது. ஆனால் , சர்க்கரை உற்பத்திக்கு தேவையான கரும்பு கிடைக்காமல், ஆலைகள் திணறி வருகின்றன. எனவே , கரும்பு சாகுபடி பரப்பை , மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டு வர , வேளாண்துறை முயற்சி மேற்கொண்டுள்ளது.

இது குறித்து , வேளாண்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: கரும்பு உற்பத்தியை அதிகரிக்க, நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டம் , நுண்ணீர் பாசன திட்டம் , இயந்திரமயமாக்கல் திட்டங்களை அரசு செயல்படுத்துகிறது. இதன்படி , விவசாயிகளுக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்படுகின்றன.இந்தாண்டு , 35 ஆயிரம் ஏக்கர் பரப்பிலான , கரும்பு சாகுபடிக்கு , சொட்டு நீர் பாசன முறையை செயல்படுத்தவும், 30 கோடி ரூபாய் செலவில் , நிழல் வலைக்கூடங்கள் அமைக்கவும் மானியம் வழங்கப்படும்.மேலும் , விவசாயிகளுக்கு, 24 கோடி கரும்பு நாற்றுகள் வழங்குவது உட்பட , பல திட்டங்கள் செயல்படுத்தப்படஉள்ளன.இவ்வாறு அவர் கூறினார்.

- நமது நிருபர் –

**தேயிலை ஏல மையங்களின் செயல்பாடு : கட்ட கடைசியில் தமிழக அரசின்'டீ சர்வ்'**

ஊட்டி: நாட்டில் உள்ள தேயிலை ஏல மையங்களை ஒப்பிடுகையில் , நீலகிரியில் உள்ள அரசு தேயிலை ஏல மையம் கடைசி இடத்தில் உள்ளது. கோல்கட்டா , கவுஹாத்தி, சிலிகுரி, கொச்சி, கோவை, குன்னுார் ஆகிய இடங்களில் , தனியார் சார்பில், தேயிலை ஏல மையங்கள் செயல்படுகின்றன.

வாரந்தோறும் ஏலம் : இவற்றில் , உறுப்பினர்களாக உள்ள வெளிநாட்டு , உள்நாட்டு வர்த்தகர்கள், வாரந்தோறும் நடக்கும் ஏலத்தில் பங்கேற்று , தேயிலை துாள் கொள்முதல் செய்கின்றனர்.

நீலகிரியில், அரசு கூட்டுறவு தொழிற்சாலைகள் , 15 உள்ளன. இவற்றில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை துாள் , மாநில அரசின் சார்பில் , குன்னுாரில் உள்ள , 'டீ சர்வ்' மையம் மூலம் ஏலம் விடப்படுகிறது. 2013ல் துவங்கி, தற்போது வரை, நாட்டில் உள்ள ஏல மையங்களில் , 'டீ சர்வ் ' மையம், கடைசி இடத்தில் உள்ளது. இதன்படி , ஐந்தாண்டுகளில், கோல்கட்டா ஏல மையத்தில் விற்கப்பட்ட தேயிலை துாளின் சராசரி விலை, கிலோவுக்கு, 163 - 175 ரூபாய் இருந்தது. கவுஹாத்தி, 132 - 140, சிலிகுரி, 117 - 127, கொச்சி, 103 - 125, கோவை, 75 - 100 ரூபாய் வரை விலை கிடைத்து உள்ளது.

நிர்வாக குறைபாடு : குன்னூரில் , தனியார் ஏல மையம் மூலம் விற்கப்பட்ட , தேயிலை துாளின் சராசரி விலை , கிலோவுக்கு, 73 - 99 ரூபாய் வரை இருந்தது. மாநில அரசின் , 'டீ சர்வ் ' மையத்தில், கிலோ, 58 - 88 ரூபாய் வரை மட்டுமே , தேயிலை துாள் விற்கப்பட்டுள்ளது; இது, தேயிலை தொழில் சார்ந்தோர் மத்தியில் , அதிர்ச்சியை ஏற்படுத்திஉள்ளது.

நீலகிரி சிறு தேயிலை விவசாயிகள் விழிப்புணர்வு மைய அமைப்பாளர் வேணுகோபால் கூறுகையில் , "கூட்டுறவு தொழிற்சாலைகளில் , தரமான தேயிலை துாள் உற்பத்திக்கு முக்கியத்துவம் வழங்கப்படாததும் , நிர்வாகக் குறைபாடும் தான் , இதற்கு காரணம். விரிவான ஆய்வு நடத்தி, தீர்வு காண வேண்டும்," என்றார்.

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**கோவை மாவட்டத்தில் விவசாய உற்பத்தி குழுக்கள் அமைக்க ரூ. 1 கோடியே 30 லட்சம் ஒதுக்கீடு**



கோவை மாவட்டத்தில் விவசாய உற்பத்தி குழுக்கள் அமைக்க ரூ. 1 கோடியே 30 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டு உள்ளதாக கலெக்டர் ஹரிகரன் தெரிவித்துள்ளார்.

ஆகஸ்ட் 09, 2017, 03:45 AM

கோவை,

கோவை மாவட்டத்தில் விவசாய உற்பத்தி குழுக்கள் அமைக்க ரூ. 1 கோடியே 30 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டு உள்ளதாக கலெக்டர் ஹரிகரன் தெரிவித்துள்ளார். இது குறித்து கோவை மாவட்ட கலெக்டர் ஹரிகரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:–

தமிழகத்தில் 2017–18–ம் ஆண்டில் கூட்டு பண்ணையம் திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு உத்தர விட்டு உள்ளது. இந்த திட்டத்தில் 20 நபர் கொண்ட சிறு மற்றும் குறு விவசாயிகளை ஒருங்கிணைந்து ஒரு விவசாய ஆர்வலர் குழு அமைக்கப்பட வேண்டும். 5 விவசாய ஆர்வலர் குழுக்கள் ஒருங்கிணைக் கப்பட்டு, ஒரு விவசாய உற்பத்திக்குழு ஆரம்பிக்கப்படும்.

வணிக வசதியுடன் கூடிய இந்த கூட்டு பண்ணைய முறையில், ஒருங்கிணைந்த பரப்பில் ஒரே பயிரை உற்பத்தி செய்து, நீடித்த லாபகரமான தொழிலாக விவசாயத்தை மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கலப்பு பண்ணையம், மதிப்பு கூட்டிய வேளாண்பொருட்கள் உற்பத்தி செய்தல் மற்றும் குழுவினரே தொழில் முனைவோராக தொடரவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

சிறு, குறு விவசாயிகள் அடங்கிய உற்பத்தி குழுக்கள் உயரிய வேளாண்மைத்துறை தொழில்நுட்பங்கள் மூலம் விளைச்சலை பெருக்க அரசுத்துறை அலுவலர்கள் உதவுவார்கள். உற்பத்தி குழுக்கள் தொடங்கும் போது, ஒரு குழுவுக்கு தலா ரூ.5 லட்சம் இருப்பு நிதி 3 கட்டமாக பிரித்து வழங்கப்படும். இந்த குழுக்கள் கூட்டுறவு சங்கமாக பதிவு செய்யப்பட வேண்டும்.

கோவை மாவட்டத்தில், 130 விவசாய ஆர்வலர் குழுக்கள் தொடங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இந்த குழுக்கள் ஒருங்கிணைக்கப்பட்டு மொத்தம் 26 விவசாய உற்பத்தி குழுக்கள் அமைக்கப் படும். அதன்படி 2 ஆயிரத்து 600 விவசாயிகள் கூட்டு பண்ணையம் திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட உள்ளனர். இதற்காக ரூ.1 கோடியே 30 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை துறையுடன் தோட்டக்கலை , வேளாண் வணிகம் மற்றும் வேளாண்மை பொறியியல் துறை ஆகியவற்றின் மூலம் விவசாயிகளுக்கு தேவையான தொழில்நுட்ப ஆலோசனை வழங்கப்படும். இந்த திட்டம் குறித்த கூடுதல் விவரங்களுக்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குனர்களை தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## நாமகிரிப்பேட்டையில் 1,540 மூட்டை மஞ்சள் 80 லட்சத்துக்கு ஏலம்

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க ஏலத்தில் , 1,540 மூட்டை மஞ்சள் 80 லட்சத்துக்கு விற்பனையானது. நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் , வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை மஞ்சள் ஏலம் நடக்கிறது. நேற்று நடந்த ஏலத்தில் ஈரோடு , சேலம், நாமகிரிப்பேட்டை, ஆத்தூர், தம்மம்பட்டி சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் விரலி மஞ்சள் 1,050 மூட்டை, கிழங்கு மஞ்சள் 470 மூட்டை மற்றும் பனங்காளி மஞ்சள் 22 மூட்டைகள் என மொத்தம் 1,540 மூட்டை மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

சேலம், ஈரோடு, நாமக்கல் மற்றும் திருப்பூரை சேர்ந்த வியாபாரிகள் ஏலத்தில் கலந்துகொண்டனர். ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டால் அதிகபட்சம் 10,200, குறைந்தபட்சம் 7,689 என விற்பனையானது. அதேபோல் , கிழங்கு (உருண்டை) மஞ்சள் குவிண்டால் அதிகபட்சம் 8,569, குறைந்தபட்சம் 7,012, பனங்காலி மஞ்சள் அதிகபட்சம் 24,085 மற்றும் குறைந்தபட்சம் 13,785 என விற்பனையானது. ஒட்டுமொத்தமாக 1,540 மூட்டை மஞ்சள் 80 லட்சத்துக்கு விற்பனையானது.

## வேளாண் அறிவியல் நிலையத்தில் தீவன மேலாண்மை குறித்த பயிற்சி

நாமக்கல்: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் , கால்நடைகளுக்கான தீவன மேலாண்மை மற்றும் மரபுசாரா பொருட்களின் பயன்பாடு குறித்து இலவச பயிற்சி


முகாம் வரும் 22ம் தேதி நடக்கிறது. இதுகுறித்து நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தின் திட்ட தலைவர் இணை பேராசிரியர் அகிலா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 22ம் தேதி காலை 9 மணிக்கு கால்நடைகளுக்கான தீவன மேலாண்மை மற்றும் மரபுசாரா பொருட்களின் பயன்பாடு என்ற தலைப்பில், ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்கிறது.

முகாமில் கறவை மாடு , வெள்ளாடு மற்றும் செம்மறியாடுகளுக்கான தீவன மேலாண்மை, தீவன அளவுகள் மற்றும் தீவனம் தயாரிக்கும் முறைகள் மற்றும் மரபுசாரா தீவனப் பொருட்கள் , வேளாண் கழிவுகளை கால்நடை தீவனாக பயன்படுத்தும் முறைகள் , உள்ளூரில் மலிவு விலையில் கிடைக்கும் தீவனப்பொருட்களின் பயன்பாடு குறித்த பயிற்சி விரிவாக நடத்தப்பட உள்ளது.

இதில் விவசாயிகள் , பண்ணையாளர்கள், ஊரக மகளிர் , இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரில் வந்து வரும் 21ம் தேதிக்குள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும் பயிற்சிக்கு வரும் விவசாயிகள் தங்களுடைய ஆதார் எண்னை கண்டிப்பாக பதிவு செய்யவேண்டும்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**பால் உற்பத்தி, இனப் பெருக்கம் அறிய பசுக்களுக்கு மருத்துவ அடையாள அட்டை அறிமுகம்**



கோவையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பசுக்களுக்கான மருத்துவ அடையாள அட்டைகள். படம்: ஜெ.மனோகரன்

உற்பத்தித் திறன் உள்ள பசு மாடுகளை அடையாளம் காணும் வகையில் அவைகளுக்கான மருத்துவ அடையாள அட்டை வழங்கும் திட்டம் முதல்முறையாக கோவையில் தொடங்கப்பட்டுள்ளது.

பசு மாடுகளின் பால் உற்பத்தி, இனப்பெருக்கம் உள்ளிட்டவற்றை அறிந்து கொள்ளும் வகையில் நாடு முழுவதும் உள்ள பசு மாடுகளுக்கு மருத்துவ அட்டை வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டம் முதல் முறையாக தமிழகத்தில் கோவை மாவட்டத்தில் சோதனை அடிப்படையில் தொடங்கப் பட்டுள்ளது. பசு மாடுகளின் விவரங் களைச் சேகரித்து இந்த அடையாள அட்டையில் பதிவு செய்வதற்கான பணிகளும் அந்தந்த பகுதி கால்நடை மருந்தகங்களில் தொடங்கியுள்ளன.

கால்நடை பராமரிப்புத் துறை கோவை மண்டல இணை இயக்குநர் ராமச்சந்திரன் கூறும்போது, ‘தேசிய பால் உற்பத்திக் கழகம் மூலம், நாடு முழுவதும் உள்ள உற்பத்தித்

திறன் உள்ள (பால் , இனப் பெருக்கம்) பசுக்களின் எண்ணிக்கையைக் கணக்கிட திட்டமிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் , ஒட்டுமொத்த தகவல்களையும் சேகரிக்க கால்நடைகளுக்கான உற்பத்தி மற்றும் மருத்துவ தகவல்களுக்கான தளமான ஐஎன்ஏபிஎச் என்ற செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

கால்நடை உரிமையாளர்களிடம் உள்ள பசுமாடுகளின் தகவல்கள் முழுமையாக பெற்றுக் கொள்ளப்படும். அந்த தகவல்கள் மருத்துவ அட்டையில் பதிவு செய்து உரிமையாளர்களுக்கு கொடுக்கப்படும். அதற்கு அடையாளமாக மாடுகளுக்கு காதுகளில் அடையாள பொத்தான் பொருத்தப்படும். அந்த தகவல்கள் இந்த செயலியில் பதிவேற்றம் செய்யப் படும். இதன் மூலம் உற்பத்தித் திறன் உள்ள பசு இனங்களை எளிதில் அடையாளம் காணவும் , அவற்றின் உடல்நிலையை தொடர்ந்து கண்காணிக்கவும் முடியும்' என்றார்.

**வண்ண அட்டைகள்**

அதிகாரிகள் கூறும்போது, 'மாடுகளுக்கு 12 இலக்க அடையாள எண் கொடுக்கப்படும். கோவையில் 105 மையங்களில் இதற்கான பணிகள் தொடங்கி யுள்ளன.

கலப்பினமாடு, நாட்டினமாடு, எருமை ஆகியவற்றுக்கு 3 வண்ணங்களில் 3 வகையான அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. விரைவில் மற்ற பகுதிகளுக்கும் இத்திட்டம் விரிவு படுத்தப்படும். கால்நடைகளைக் கண்காணிக்கவும் , மருத்துவ உதவி மற்றும் ஆலோசனை களைப் பெறவும் , மருத்துவக் காப்பீட்டுக்கும் இந்த அடையாள அட்டைகள் உதவும்' என்றனர்.

**வரவேற்பும் - எதிர்ப்பும்**

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் சு.பழனிச்சாமி கூறும்போது , 'மாடுகளுக்கு அடையாள அட்டை வழங்கப்படுவதால் விவசாயிகள் மாடுகளை வாங்குதல் மற்றும் விற்பனை செய்யும்போது நெருக்கடி ஏற்படும். வறட்சியால் விவசாயிகள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள நிலையில் விவசாயிகளைப் பாதுகாக்க மத்திய, மாநில அரசுகள் எந்த முயற்சியையும் எடுக்காமல் , கால்நடைகளைப் பாதுகாப்பதில் ஆர்வம் காட்டுவது அதிர்ச்சியளிக்கிறது.

கால்நடைகளை வளர்க்க முடியாமல் விற்க நினைக்கும் விவசாயிகளும் இந்த திட்டத்தால் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள். மாடுகளை இறைச்சிக்காக விற்பதை தடுக்கும் நோக்கத்திலேயே இத்திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. தற்போதுள்ள நிலையில் இந்த திட்டம் தேவையற்றது' என்றார்.

அதேசமயம், மாடுகளுக்கு ஏற்படும் நோய்கள் , அதற்காக வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்கள் தொடர்ந்து கண்காணிக்கவும் , மருத்துவவசதிகளைப் பெறவும் இந்த அடையாள அட்டைகள் பயன்படும். எனவே வரவேற்கத்தக்கது என ஒரு சில விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

**இந்தியாவில் ஊட்டச்சத்து புரட்சியை உருவாக்க வேண்டும் : எம்.எஸ்.சுவாமிநாதன் வலியுறுத்தல்**




▲ ரோட்டரி கிளப் ஆஃப் மெட்ராஸ் (கிழக்கு) சார்பில் 'சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் விருது–2017' வழங்கும் நிகழ்ச்சி சென்னையில் நேற்று நடைபெற்றது. நிகழ்ச்சியில், மொஸம்பியா நாட்டைச் சேர்ந்த வேளாண் விஞ்ஞானி டாக்டர் மரியா இசபெல் அன்ராடேவுக்கு விருது வழங்கி வாழ்த்து தெரிவிக்கிறார் எம்.எஸ்.சுவாமிநாதன். உடன் ரோட்டரி மாவட்ட (3232) ஆளுநர் ஆர்.சீனிவாசன், தொழிலதிபர் எஸ்.அபய குமார் ஜெயின் உள்ளிட்டோர். படம்: ம.பிரபு

இந்தியாவில் ஊட்டச்சத்து குறைபாட்டை போக்க , வேளாண் புரட்சியைப் போல் ஊட்டச்சத்து புரட்சியை உருவாக்க வேண்டும் என வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் வலியுறுத்தினார்.

ரோட்டரி கிளப் ஆஃப் மெட்ராஸ் (கிழக்கு) சார்பில் 'சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான டாக்டர் எஸ்.எஸ்.சுவாமிநாதன் விருது-2017' வழங்கும் நிகழ்ச்சி சென்னையில் நேற்று நடைபெற்றது. நிகழ்ச்சியில் , மொஸம்பியா நாட்டைச் சேர்ந்த வேளாண் விஞ்ஞானி டாக்டர் மரியா இசபெல் அன்ராடேவுக்கு விருது வழங்கப்பட்டது.

இவ்விழாவில் பங்கேற்ற எம்.எஸ்.சுவாமிநாதன் பேசிய தாவது: உணவு இல்லாமல் வெறும் மருந்தை மட்டும் வைத்து ஊட்டச் சத்து குறைபாட்டை போக்க முடியாது. மரியா இசபெல் அன்ராடே ஆப்பிரிக்காவில் நிலவிய ஊட்டச் சத்து குறைபாட்டை

போக்க மருந்து மூலமாக தீர்வு காணாமல் உணவு மூலம் தீர்வு கண்டுள்ளார். அவ்வாறு தீர்வுகாண அவர் ஒரு வகை சர்க்கரை வள்ளிக் கிழங்கை கண்டறிந்து பயன்படுத்தியுள்ளார்.

மேலும், இந்தியாவை பொறுத்த வரை வேளாண் உற்பத்தியில் நாம் முன்னணியில் இருந்தாலும், ஊட்டச்சத்து குறைபாட்டை போக்குவது நமக்கு சவாலாக உள்ளது. அந்த குறைபாட்டை போக்க வேளாண் புரட்சியை போல் நம் நாட்டில் ஊட்டச்சத்து புரட்சி ஏற்பட வேண்டும் என்றார்.

இதில் ரோட்டரி மாவட்ட ஆளுநர் சீனிவாசன் , தொழிலதிபர் அபய குமார் ஜெயின் , ரோட்டரி கிளப் ஆஃப் மெட்ராஸ் (கிழக்கு) தலைவர் புருஷோத்தம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். ரோட்டரி கிளப் ஆஃப் மெட்ராஸ் (கிழக்கு) சார்பில் ‘சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் விருது- 2017’ வழங்கும் நிகழ்ச்சி சென்னையில் நேற்று நடைபெற்றது.